நடந்தது. இப்போது டி.வி.யில் காட்டிய அந்த நடிகையும் இங்கு வந்து நடனமாடினார். அப்போது அந்தப் பெண், சுவாமிகளைப் பார்த்து கையசைப்பதும், அவர் பதிலுக்கு விதவிதமான சைகைகளைக் காட்டுவதுமாக இருந்தது. ஒருகட்டத்தில் தன் மடியிலேயே நடிகையை அமரவைத்து ஆப்பிள் பழத்தைக் கொடுத்தார். அதைப் பார்த்த நாங்களே, 'சாமி ஏன் இப்படிச் செய்கிறார்' என்று நினைத்தோம். அதேபோல் எப்போதும் சின்ன வயது பெண்கள்தான் அவரைச் சுற்றி இருப்பார்கள். இப்போதுதான் அதன் அர்த்தங்கள் எங்களுக்குப் புரிகிறது" என்று ஆதங்கப்பட்டார்.

அருகில் உள்ள சேஷாத்திர ஆஸ்ரம நிர்வாகி முத்துக்குமாரசாமி, "ஆஸ்ரமத்தில் இப்படி நடந்த விஷயம் உண்மையானால் அது மிகவும் கண்டிக்கத் தக்கது. இறைவன் இருக்கும் இடமாக மக்கள் நம்புவது ஆஸ்ரமங்களைதான். அப்படிப்பட்ட இடத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் அரங்கேறியதற்கு மக்கள் தண்டனை தருகிறார்களோ இல்லையோ... நிச்சயம் ஆண்டவன் தண்டனை தருவார் என்பதை விளக்க நிறைய வரலாற்றுச் சம்பவங்கள் உண்டு" என்றார் கோபமாக.

சுவாமி நித்யானந்தாவுடன் இருக்கும் அந்த 'ஆர்' நடிகைதான் ஒன்றரை மாதங்களுக்கு முன்பு திருவண்ணாமலையில் நடந்த பிறந்தநாள் விழா கூட்டத்தில் ஆட்டம் போட்டிருக்கிறார் என்று உள்ளூர்வாசிகளே சொல்கிறார்கள். அதே நேரத்தில் பஜனை பாடி ஆடும் போது சிலருக்கு நித்யானந்தா ஆப்பிள் கொடுப்பாராம். இது பற்றிக் கூறும் அவருடைய பக்தர், "பெரும்பாலும் இளம்பெண்களுக்கே அப்படி ஆப்பிள் கொடுப்பார். சிலரை தன் மடியில்கூட அழைத்து உட்கார வைத்து ஆப்பிள் கொடுப்பார். வயதான பெண்மணிகளைக் கண்டுகொள்ள மாட்டார். அதே நேரத்தில் பஜனை பாடி ஆடும் போது மட்டும் எந்த விதமான கேமராவோ, வீடியோகாரர்களோ உள்ளே வந்துவிடாமல் பார்த்துக் கொள்வார். இதற்காகவே தனியாக சில பக்தர்களை நியமித்து, அதை வாட்ச் பண்ணச் சொல்வார்" என்கிறார்.

நடிகையுடன் நித்யானந்தா இருக்கும் படுக்கையறைக் காட்சிகள் உண்மையான ஆன்மீகவாதிகளின் மேல் மக்களுக்கு உள்ள நம்பிக்கையை குலைக்கும் விதத்தில் இருக்கின்றன. அதுமட்டுமின்றி அண்ணாமலையார் இருக்கும் திருவண்ணாமலையின் பெயரைக் கெடுக்கும் விதத்திலும் இருக்கிறது என்று வேதனைப்படுகிறார்கள் மக்கள்.

இது ஒருபுறமிருக்க... ஒவ்வொரு மாநிலத்திலும் ஆன்மீக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் செல்வாக்கு பெற்ற சில வி.ஐ.பி.க்களை நித்யானந்தாவே விமான டிக்கெட் எடுத்துக் கொடுத்து, பெங்களூருக்கு வர வைப்பாராம். 'இங்கு வாருங்கள். என் கெஸ்டாக இரண்டு நாள் இருங்கள். இங்குள்ள அமைதியான சூழல் எல்லாம் உங்கள் மனதிற்கு ஆறுதல் அளிக்கும்' என்பாராம். இதைநம்பி தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களில் இருந்து பெங்களூர் ஆஸ்ரமத்திற்குச் சென்ற வி.ஐ.பி.கள் ஏராளம்! அவர்களுக்கு அந்த ஆஸ்ரமத்தில் அமைதியான சூழலை உண்டாக்க என்ன வைத்திருந்தார் நித்யானந்தா? அது இனி வரும் விசாரணையில்தான் வெளிவரும்!

**படங்கள் : பிரகாஷ் ஆனந்த்**

## இந்து சமுதாயத்திற்கு அவமானம்!


அர்ஜுன் சம்பத்

நித்யானந்தாவின் படுக்கையறைக் காட்சிகள் பற்றி 'இந்து மக்கள் கட்சி' ஆங்காங்கே போராட்டங்களை நடத்தியிருக்கிறது. 'நித்யானந்தாவின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கோரிக்கை வைத்துள்ளது. இந்நிலையில் நாம் இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பதிடம் பேசினோம். அவர், "ஒழுக்கக் கேட்டினால்தான் இது மாதிரி நடக்கிறது. தியானம், பிரம்மச்சர்யம் பற்றி மக்களிடம் சொல்லிவிட்டு இப்படி நடித்தால் எப்படி? இதனால் ஒட்டு மொத்த இந்து சமுதாயத்திற்கும் அவமானம். உலகத்திலேயே வேதத்திற்கென்று உள்ள ஒரே பல்கலைக்கழகம் அமெரிக்காவில் இருக்கிறது. அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவி, சிறிய வயதிலேயே நித்யானந்தத்திற்குக் கிடைத்தது. மைசூரில் 600 ஏக்கரில் பிரம்மாண்ட ஆஸ்ரமம், இந்தியா முழுவதும் தியான வகுப்புகள் என்று நன்றாகச் செயல்பட்டவர் திடீரென்று பெண் சபலத்தில் விழுந்தது, இந்துக்கள் மனதை வேதனைப்பட வைத்துள்ளது. குருபீடம் என்பது பெரிய விஷயம். ஆனால் குரு பீடத்திலிருந்து இவர் செய்த காரியம் மன்னிக்க முடியாதது. வேண்டுமென்றால் அவர் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளட்டும். இந்து மதம் திருமணத்திற்கு எதிர்ப்பானது அல்ல. ஆனால் குருபீடத்தை அவமதித்ததை ஏற்றுக் கொள்ள முடியாது. இதற்கு நித்யானந்தா பரிகாரம் செய்தே ஆகவேண்டும்.

இப்போதுகூட கல்கி சாமியார் மீது குற்றச்சாட்டு வந்துள்ளது. தொடர்ந்து இந்து சாமியார்கள் மீது குற்றச்சாட்டு எழக் காரணம், குரு பீடத்தில் இருப்பவர்கள் ஒழுக்கக் கேடாக இருப்பதால்தான். விவேகானந்தர் சொன்னது போல், உண்மையான துறவிகளை மக்கள் அடையாளம் காணவேண்டும். இது போன்ற சாமியார்களைப் புறக்கணிக்க வேண்டும். வாழ்க்கைக்குப் பயன்படும் யோகா, தியானம் போன்றவற்றையும், இந்து சமயத்தைப் பற்றியும் கற்றுக் கொடுக்க வேண்டிய கடமை குரு பீடத்தில் உள்ளவர்களுக்கு உண்டு. நித்தியானந்தத்தின் செயல்பாட்டைப் பார்க்கும்போது கூட்டமும் பணமும் சேர்ந்தால் அங்கே ஏதேனும் ஒழுக்கக்கேடு இருக்குமோ என்ற எண்ணம் தோன்றுகின்றது" என்று முடித்துக் கொண்டார்.